# இணையவழி விளையாட்டுக்கு 28% ஜிஎஸ்டி: மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல்



**புது தில்லி, ஆக. 11:** இணையவழி விளையாட்டுகள், கேசினோ மற்றும் குதிரைப் பந்தைய கிளப்புகளுக்கு 28 சதவீத ஜிஎஸ்டி (சரக்கு மற்றும் சேவை வரி) விதிக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதாவுக்கு மக்களவையில் வெள்ளிக்கிழமை ஒப்புதல் அளிக்கப்பட்டது.

'மத்திய சரக்கு மற்றும் சேவை வரி திருத்த மசோதா 2023' மற்றும் 'ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி திருத்த மசோதா 2023' ஆகிய இந்த மசோதாக்களை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இரு அவைகளிலும் அறிமுகம் செய்தார். விவாதம் ஏதுமின்றி, குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதாவுக்கு இரு அவைகளிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்தச் சட்டத்திருத்தத்தின் படி, கேசினோ மற்றும் குதிரைப் பந்தய கிளப்புகளுக்கு 28 சதவீத ஜிஎஸ்டி விதிக்கும் வகையில் துணைப் பிரிவும் விளக்கமும், மத்திய சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் (சிஜிஎஸ்டி) 2017-இன் அட்டவணை 3-இல் சேர்க்கப்படும்.

அதுபோல, ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தம், இந்தியாவில் இருந்தபடி செயல்படும் பணம் வைத்து விளையாடும் வகையிலான இணையவழி விளையாட்டுகளுக்கு 28 சதவீத ஜிஎஸ்டி விதிக்க வகை செய்கிறது. இந்த நிறுவனங்கள் இந்தியாவில் ஜிஎஸ்டி பதிவு செய்வதும் இந்தச் சட்டத்திருத்தத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அதோடு, இந்த வரி செலுத்துதல் நடைமுறைகள் மற்றும் ஜிஎஸ்டி பதிவுக்கு உடன்படாத, வெளிநாடுகளில் இருந்தபடி செயல்படும் இணையவழி விளையாட்டு வலைதளங்களை முடக்கவும் இந்தத் திருத்தம் வகை செய்கிறது.

இந்த இரு திருத்தங்களுக்கும் ஜிஎஸ்டி கவுன்சில் கடந்த வாரம் ஒப்புதல் அளித்திருந்தது. தற்போது நாடாளுமன்றமும் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்ததாக, இதனடிப்படையில் மாநிலங்கள் எஸ்ஜிஎஸ்டி (மாநில சரக்கு மற்றும் சேவை வரி) சட்டங்களில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள சட்டப்பேரவைகளில் ஒப்புதல் பெறவேண்டும்.

# 3 குற்றவியல் சட்டங்களை மாற்ற மசோதாக்கள்

## மக்களவையில் அமித் ஷா தாக்கல்

**புது தில்லி, ஆக.11:** பிரிட்டிஷ் ஆட்சிக் கால குற்றவியல் சட்டங்களை மாற்ற வகை செய்யும் 3 மசோதாக்கள் மக்களவையில் வெள்ளிக்கிழமை அறிமுகம் செய்யப்பட்டன. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவற்றை தாக்கல் செய்தார்.

இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி) 1860-ஐ மாற்றம் செய்ய 'பாரதிய நியாய சம்ஹிதா (பிஎன்எஸ்) மசோதா 2023' என்ற மசோதாவும், குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சிஆர்பிசி) 1898-ஐ மாற்றம் செய்ய 'பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா (பிஎன்எஸ்எஸ்) மசோதா 2023' என்ற மசோதாவும், இந்திய ஆதாரச் சட்டம் 1872-ஐ மாற்றம் செய்ய 'பாரதிய சாக்ஷிய (பிஎஸ்) மசோதா 2023' மசோதாவும் அறிமுகம் செய்யப்பட்டன.

இந்த 3 மசோதாக்களை அறிமுகம் செய்து மக்களவையில் அமித் ஷா பேசியதாவது: பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நிர்வாகத்தைப் பாதுகாக்கவும், வலுப்படுத்தவும், அவர்களின் சட்டங்களை எதிர்ப்பவர்களுக்கு தண்டனை கொடுப்பதை மட்டும் நோக்கமாக காலனிய ஆட்சி சட்டங்கள் கொண்டிருந்தன.

இந்த 3 குற்றவியல் சட்டங்களை மாற்றம் செய்யும் வகையில் இந்த மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவற்றின்படி, குற்றச் செயல்களை நிறுத்துவதற்கான உணர்வை ஏற்படுத்துவதற்காக மட்டுமே தண்டனை அளிக்கப்படும்.

**அதிகபட்சம் 3 ஆண்டுகளில் நீதி:** இந்த 3 சட்டங்களும் இந்திய குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கும் என்பதோடு, விரைவான நீதி கிடைப்பதை உறுதிப்படுத்தும். நாட்டின் குற்றவியல் நீதி நடைமுறையில் மிகப்பெரிய மாற்றத்தை இந்த மசோதாக்கள் ஏற்படுத்தும். அதிகபட்சமாக 3 ஆண்டுகளில் நீதியைப் பெற்றுவிட முடியும்.

**90 நாள்களில் குற்றப்பத்திரிகை:** புதிய சட்டங்களின்படி, குற்ற வழக்கில் குற்றப்பத்திரிகையை 90 நாள்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மேலும் 90 நாள்கள் கூடுதல் அவகாசத்தை நீதிமன்றம் அளிக்கலாம். அதிகபட்சம் 180 நாள்களுக்குள் விசாரணையை முடித்து, ஆவணங்களை வழக்கு விசாரணைக்கு அனுப்பிவைத்துவிட வேண்டும். வழக்கு விசாரணை நிறைவடைந்ததும் 30



நாள்களில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கொலை, அரசுக்கு எதிரான குற்றங்களுக்கு இந்த மசோதா மூலமாக முதல்முறையாக முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. பல குற்றங்கள் பாலின நடுநிலை செய்யப்பட்டுள்ளன.

**தேசத் துரோக சட்டம் ரத்து:** தேசத் துரோக சட்டத்தை முழுமையாக ரத்து செய்ய பிஎன்எஸ் மசோதா வகை செய்கிறது.

கும்பலாக தாக்குதல் நடத்துவது மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவும் நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது. பிரிவினையைத் தூண்டுதல், ஆயுதக் கிளர்ச்சி, தேசத்தின் இறையாண்மை, ஒற்றுமை அல்லது ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை புதிய குற்றங்களாக இந்த மசோதா பட்டியலிட்டுள்ளது.

சிறிய குற்றங்களில் ஈடுபட்டு முதல் முறை சிக்குபவர்களுக்கு கட்டாய சமூக சேவைகளில் ஈடுபடும் வகையிலான தண்டனையை அளிக்க இந்த மசோதா வகை செய்கிறது.

கும்பலாக சேர்ந்து தாக்குதல் நடத்தும் குற்றத்துக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை வழங்க மசோதா வகை செய்கிறது.

திருமணம், வேலைவாய்ப்பு, பதவி உயர்வு என்று ஏமாற்றி பெண்கள் மீது நடைபெறும் பாலியல் சுரண்டல்கள் மற்றும் பெண்களின் மத அடையாளத்தை மறைத்து திருமணம் செய்தல் ஆகியவை குற்றமாகக் கருதப்படும்.

கூட்டுப்பாலியல் குற்றங்களுக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்க மசோதா வகை செய்கிறது. சிறுமிக்கு எதிரான கூட்டு பாலியல் குற்றத்துக்கு மரண தண்டனை வழங்கவும் இந்த மசோதா வகை செய்கிறது.

**பயங்கரவாதம்:** பிஎன்எஸ் மசோதாவின்படி, இந்தியாவில் அல்லது வெளிநாட்டில் இருந்தபடி இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நோக்கிலும், பொதுமக்களை மிரட்டுதல் அல்லது பொது ஒழுங்குக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் செயல்படுபவர் பயங்கரவாதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் நபரின் சொத்துகளை முடக்கலாம்.

**தண்டனைக் குறைப்பு நடைமுறையில் மாற்றம்:** தண்டனைக் குறைப்பு நடைமுறைகளை அரசுகள் அரசியல் ரீதியில் பயன்படுத்துவதை நிறுத்த புதிய நடைமுறை இந்த மசோதாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, மரண தண்டனைகளை ஆயுள் தண்டனையாக மட்டுமே குறைக்க முடியும். அதுபோல, ஆயுள் தண்டனைகளை 7 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையாக மட்டுமே குறைக்க முடியும் என்றார் அமித் ஷா.

இந்த 3 மசோதாக்களையும் உள்துறை விவகாரத்துக்கான நாடாளுமன்ற நிலைக் குழு ஆய்வுக்கு அனுப்ப வேண்டும் என்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

### முக்கிய அம்சங்கள்...

- 180 நாள்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும்.
- விசாரணை நிறைவடைந்ததும் 30 நாள்களில் தீர்ப்பு
- அதிகபட்சமாக 3 ஆண்டுகளில் நீதி
- தேசத் துரோக சட்டம் முழுமையாக ரத்து
- கும்பல் தாக்குதலுக்கு 7 ஆண்டுகள் சிறை அல்லது மரண தண்டனை.
- சிறுமிக்கு எதிரான கூட்டு பாலியல் குற்றத்துக்கு மரண தண்டனை.
- மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க முடியும்.
- பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் நபரின் சொத்துகள் முடக்கம்
- வழக்குகளில் தண்டனை கிடைக்கும் விகிதம் 90 சதவீதமாக உயரும்
- விரைவான நீதி கிடைப்பதை உறுதிப் படுத்தும்.

# ஹவாய் காட்டுத் தீ: பலி 55–ஆக உயர்வு

**வாயிலுகு, ஆக. 10:** அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்திலுள்ள மாவி தீவில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 55–ஆக அதிகரித்துள்ளது.

இது குறித்து அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாவி தீவில் ஏற்பட்ட காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டுள்ள ஹலேனா, புலேஹு மற்றும் மத்தியப் பகுதிகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55–ஆ உயர்ந்துள்ளது.

காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்திருக்கக் கூடியவர்களைக் கண்டறிந்து உடல்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் கூறினர்.



காட்டுத் தீக்கிரையான மாவி தீவுப் பகுதி.

அமெரிக்காவின் ஹவாய் மாகாணம், மாவி தீவில் புதன்கிழமை திடீரென காட்டுத் தீ மிக வேகமாகப் பரவியது. இதில், 1,700–களில் உருவாக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க சுற்றுலாத் தலமான லஹேனா நகரம் உள்ளிட்ட பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

காட்டுத் தீயில் 271 கட்டுமானங்கள், 19,000 வீடுகள், கடைகள், பிற கட்டடங்கள் சேதமடைந்ததாக அதிகாரிகள் கூறினர். லஹேனா நகரில் இந்தியாவிலிருந்து 150 ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு வந்து நடப்பட்ட பழைமை வாய்ந்த ஆலமரமும் தீயில் கருகியது.

காட்டுத் தீ பரவிய நேரத்தில் ஹவாய் தீவுக்கு தெற்கே வீசிய தோரா புயல் காரணமாக அந்த பகுதியில் காற்று பலமாக வீசிக்கொண்டிருந்தது.

வறண்ட சூழல், காற்றில் குறைவான ஈரப்பதம், வேகமான காற்று ஆகிய மூன்றும் சேர்ந்து காட்டுத் தீயை வேகமாகப் பரவச் செய்ததாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள மிக மோசமான காட்டுத் தீ சம்பவம் இதுவாகும். கடந்த 2018–இல் கலிஃபோர்னியா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 85 பேர் பலியாகி, சுமார் 19,000 வீடுகள் தீக்கிரையாகினது நினைவுகூரத்தக்கது.

EVA STALIN IAS AC

# போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு: முதல்வர் ஸ்டாலின் உறுதி

**சென்னை, ஆக. 11:** 'காவல் துறையினர், அரசு அலுவலர்கள், கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டால் போதைப் பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க முடியும்' என முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

கல்வி நிலையங்களுக்கு அருகே போதைப்பொருள்கள் விற்பனை செய்யப்படுவது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும்; இதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டுமெனவும் அவர் காவல் துறையினரைக் கேட்டுக் கொண்டார்.

'போதைப் பொருள்கள் இல்லாத தமிழ்நாடு' என்ற விழிப்புணர்வு நிகழ்வு சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், போதைப் பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழியை முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மாணவர்கள் எடுத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் முதல்வர் பேசியதாவது: போதைப் பொருள்கள் இல்லாத தமிழ்நாடு என்ற அக்கறை மிகுந்த நோக்கத்துடன் தனி விழிப்புணர்வுத் திட்டம் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது.

இதுபோன்ற நடவடிக்கையால் போதைப் பொருள்களின் பயன்பாட்டால் நடக்கும் குற்றச் சம்பவங்கள் வெகுவாகக் குறைந்து கொண்டு வருகின்றன.

போதைப் பழக்கம் என்பது, அதைப் பயன்படுத்துகிறவர்கள் மட்டுமல்லாமல், அவர்கள் குடும்பத்தினர், சமூகத்தினர் என அனைவரையும் பாதிக்கும் கொடிய நோயாகும்.

போதைப் பொருள் பழக்கத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் தொடர்புடைய முந்தைய குற்றவாளிகளின் நடவடிக்கைகளும் கண்காணிக்கப்படுகின்றன.

போதைப் பொருள்கள் பயன்பாடு தடுப்புச் சட்ட வழக்குகளின் கீழ், குற்றம்சாட்டப்பட்டவர்கள் தொடர்புடைய 5,184 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

கஞ்சா சாகுபடி இல்லாத தமிழ்நாடு என்ற நிலையை நமது மாநிலம் தொடர்ந்து பராமரித்து வருகிறது.

**கல்வி நிலையங்கள்:** ஒவ்வொரு காவலரும் தனது காவல் நிலைய எல்லைக்குள் போதை மருந்து விற்பனை இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். கஞ்சா விளைவிப்பதை முற்றிலுமாகத் தடுப்பதுடன், மலையடிவாரங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அண்டை மாநிலங்களில் இருந்து கடத்தி வருவதைத் தடுத்தாக வேண்டும். எல்லை மாவட்டங்களின் சோதனைச் சாவடிகளை அதிகப்படுத்துவதுடன், கடலோர மாவட்டங்களில் கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும்.

போதைப் பொருள்கள் அதிகம் விற்பனையாகும் இடங்களை நிரந்தரமாகக் கண்காணிப்பதுடன், பள்ளி, கல்வி நிலையங்களுக்கு அருகே அவை விற்பனை செய்யப்படுவது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதைப் பொருள் எதிர்ப்பு மன்றம் அமைத்து, அந்தக் கல்வி நிறுவனத்தை போதைப் பொருள் இல்லாத வளாகமாக அறிவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் பள்ளி, கல்லூரிகளில் 20,000-க்கும் மேற்பட்ட போதைப் பொருள் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

போதைப் பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க, அரசு அலுவலர்கள், கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும்.

போதைப் பொருள் ஒழிப்பைப் பொருத்தவரை, தடுப்பு நடவடிக்கைகளும் விழிப்புணர்வு பிரசாரமும் ஒரு சேர நடப்பதுடன், காவல் துறையும், பொதுமக்களும் இந்த நோக்கத்துக்காகச் செயல்பட வேண்டும்.

இப்படி செயல்பாட்டை வகுத்துக் கொண்டால், போதைப் பொருள் இல்லாத தமிழ்நாட்டை நிச்சயம் உருவாக்கலாம் என்றார் முதல்வர்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் க.பொன்முடி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ், டிஜிபி சங்கர் ஜிவால், உள்துறை முதன்மைச் செயலர் பி.அமுதா, பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




சென்னை கலைவாணர் அரங்கத்தில் காவல்துறை சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'போதைப் பொருள்கள் இல்லாத தமிழ்நாடு' நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் விழிப்புணர்வு உறுதிமொழியேற்ற நாட்டு நலப் பணி திட்ட, தேசிய மாணவர் படை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள். உடன் அமைச்சர்கள் க.பொன்முடி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, உள்துறைச் செயலர் பெ.அமுதா, காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகரக் காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உள்ளிட்டோர்.

## மாணவர்கள் உறுதியேற்பு

சென்னையில் நடைபெற்ற 'போதை பொருள்கள் இல்லாத தமிழ்நாடு' என்ற விழிப்புணர்வு நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்ற போது, கஞ்சா மற்றும் போதைப் பொருள்களை தீயிட்டு அழிக்கும் பணியைத் தொடக்கி வைத்தார். தமிழகம் முழுவதும் குறிப்பாக சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 13 ஆயிரம் கிலோ கஞ்சா, போதைப் பொருள்கள் அழிக்கப்பட்டன.

மேலும், மாணவர்களுக்கு போதைப் பொருள் எதிர்ப்புக்கான விழிப்புணர்வு உறுதிமொழியை முதல்வர் செய்து வைத்தார். உறுதிமொழியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வாசிக்க, அதனை மாணவர்கள் பின்தொடர்ந்தனர்.

**புதிய பிரிவு தொடக்கம்:** போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு ஆகியவற்றை இணைத்து புதிதாக, அமலாக்கப் பணியகம் – குற்றப் புலனாய்வுத் துறை என்ற புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

EVA STALIN